# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

## அ.சா. 17 (LW 14 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. பிரேம்குமார்** | **தொழில்** | **மருத்துவர்** |
| **த/ பெயர்** | பிச்சை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **17.06.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2 வது எதிரி ஆஜர். 1 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவனையில் எலும்பு முறிவுபிரிவில் முதுகலை பட்டபடிப்பு பயின்று வருகிறேன். நான் கடந்த 18.07.2022 அன்று திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது வேடசந்தூர் காவல் நிலைய குற்ற எண்.180/2022 பிரிவு 302, 109 இதச வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமி என்பவரை காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கொண்டு வந்தார். அவரை பரிசோதித்து பார்த்ததில் ஆரோக்கியசாமி இறந்து விட்டதால் இறந்த ஆரோக்கியசாமியை பிணவறையில் வைக்க அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் **அ.த.சா.ஆ**. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையம் பொறுப்பு வேடசந்தூர் காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை வேடசந்தூர் காவல் நிலைய பெண் காவலர் எண்.183 திருமதி.ஜோஸ்பின் அமலாராணி என்பவர் அடையாளம் காட்டினார். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.5** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அங்க மச்ச அடையாளங்களை குறித்த பின்னர் பிரேத பரிசோதனையானது மாலை 05.00 மணிக்கு தொடங்கப்பட்டது. நல்ல உடல்வாகுடைய ஆண் பிரேதமானது உடல் முழுவதும் விரைத்து காணப்பட்டது. வலது கண் மூடப்பட்டிருந்தது, இடது கண் சிறிது திறந்திருந்தது. வாய் திறந்த நிலையில் இருந்தது.

**வெளிப்புற காயங்கள்**

1. மண்டை எலும்பு சரியான வடிவம் இன்றி, உள்நோக்கி அழுந்திய நிலையில் இருந்தது.

2. மண்டையின் மேல் பகுதியில் உள்ள கபால எலும்பானது உள் அழுந்திய நிலையில்

இருந்தது. அதன் அருகிலேயே மண்டை ஓடு காயத்துடன் உடைந்திருந்தது. மண்டை ஓட்டு பகுதி உடைந்து மூளையின் பகுதி அளவு வெளியே வந்திருந்தது. வெளியே வந்த மூளையின் அந்த பகுதி சிதைந்த நிலையில் இருந்தது.

<u>உட்புறக்காயங்கள்</u>

1. குரல் வளையானது நல்ல நிலையில் இருந்தது, நெஞ்சு கூட்டுப்பகுதியானது எலும்பு முறிவின்றி நல்ல நிலையில் இருந்தது.

2. இருதயத்தின் உள்ள அறைகளில் ரத்தத்தின் அளவானது குறைவாக இருந்தது. அதை பகுப்பாய்வு செய்ததில் ரத்த ஓட்டமானது வெளிறி காணப்பட்டது.

3. இரண்டு நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல் இரத்தம் ஓட்டம் குறைவாக இருந்ததால் வெளிறி காணப்பட்டது.

4. வயிற்று பகுதியில் உள்ள இரைப்பையில் உணவானது பகுதி செரிமானமாகி இருந்தது.

5. தலைப்பகுதியை பகுப்பாய்வு செய்ததில், மண்டை ஓட்டின் முன் பகுதி மற்றும் மேல்நடுப்பகுதியானது உடைந்து அழுத்திய நிலையில் பல பகுதிகாளாக உடைந்து காணப்பட்டது.

6. மூளைபகுதியை பகுப்பாய்வு செய்ததில் முழுமையாக சேதமாகி மண்டைப்பகுதியில் பகுதியளவு வெளிவந்திருந்தது.

மேற்படி இறந்தவர் பிரேத பரிசோதனைக்கு முன் சுமார் 8 முதல் 10 நேரத்திற்கு முன்பாக இறந்திருக்ககூடும்

என்று பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அந்த 18.07.2022 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கையும் மற்றும் எனது 07.10.2022 தேதியிட்ட இறுதி கருத்துரையும் ஒரே ஆவணமாக **அ.த.சா.ஆ**.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு இறந்தவரின் உடல் உறுப்பானது விசரா பரிசோதனைக்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் அதன் அறிக்கையானது பெறப்பட்டு அந்த அறிக்கையின் அடிப்படையில், இறந்தவர் தனக்கு ஏற்பட்ட தலைக்காயத்தினாலும், அதிகபடியான ரத்தப்போக்கினாலும், அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இறந்திருக்க கூடும் என்று எனது இறுதி கருத்துரையை வழங்கினேன். நான் சொன்ன காயங்கள் என்னிடம் காட்டப்படும் மழுங்கிய மரக்கட்டையால் வேகமாக அடித்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

விபத்து பதிவேட்டில் யாரால் எந்த ஆயுதத்தால் இறந்தவருக்கு காயம் ஏற்பட்டதாக என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில் பிரேதத்தின் மீது இருந்த ஆடைகளை எடுத்து தருமாறு எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில்

நான் குறிப்பிட்டுள்ள தலையிலுள்ள காயங்கள் உயரமான இடத்திலிருந்து கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் தலையில் உள்ள காயங்கள் வர வாய்ப்புள்ளது. ஆய்வாளர் இறந்த நபருக்கு எந்த ஆயுதத்தால் காயம் ஏற்பட்டிருக்கலாம் என புகைப்படத்தையோ, ஆயுதத்தையோ காட்டி என்னிடம் கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி– நான் மேற்சொன்ன காயங்கள் கீழே விழுவதனால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் கனமான மழுங்கிய பொருட்களை கொண்டு வேகமாக தாக்கும் போதுதான் நான் சான்றிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.18 21:30:59 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.